Regd. No. M. 4593. "KUDI ARASU" 12 பக்கங்கள்

குடி அரசு

Estd. 1924.

வருட சந்தா ரூ. 5. சனி வெளியீடு. தனிப்பிரதி விலை ரூ. 0-1-6

மாலை 18 } சனிக்கிழமை, 13-1-1945 மார்கழி-மீ 30உ { மலர் 14

கான்பூர் அகில இந்திய பிற்படுத்தப்பட்ட [பார்ப்பனரல்லாதார்] மாநாடு

பெரியார் தலைமைப் பேச்சு

கான்பூரில் கடந்த டிசம்பர் 29, 30, 31 ஆகிய தேதிகளில் நடைபெற்ற அகில இந்திய பிற்படுத்தப்பட்ட (பார்ப்பனரல்லாதார்) இந்து வகுப்பார் சங்க மாநாட்டிற்குத் தலைமை வகித்த பெரியார் ஈ.வெ.ரா. அவர்களின் முன்னுரை வருமாறு:-

அன்புள்ள தோழர்களே!

உங்களை பெருங்கூட்டமாக இங்கு காணவும், உங்கள் எல்லோரையும் கண்டு பேசவும், அறிமுகப்படுத்திக் கொள்ளவும், சந்தர்ப்பம் ஏற்பட்டதைக் கொண்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். உங்களுடைய உணர்ச்சியையும் உற்சாகத்தையும், என்னைக்கண்டதும் நீங்கள் செய்த ஆரவாரத்தையும் பார்த்து நான் மிகப்பெருமையடைவதோடு எனது ஆசையைப்பற்றி மிகவும் நம்பிக்கை அடைகிறேன். மொழி வேற்றுமையாலும், நம் பழக்க வழக்கங்களாலும், நம் இருவர் நாட்டிற்கும் ஏற்பட்டிருக்கிற அதிக தூரத்தாலும், நாம் ஒருவருக்கொருவர் நெருங்கிப் பழகுவதற்கு இல்லாமலும் நம் இரு நாட்டார் கலந்திருக்கவும் ஒன்றுபட்டு வேலைசெய்து போராட்டம் [illegible]முடியாமலும் இருந்து வருகிறோம்.

இவை ஒருபுறம் இருக்க நம் எதிரிகளின் கையாயுதங்களாகிய போலி தேசியமென்பதை, தேசிய பத்திரிகைகள் என்பவையும் நம்மை ஒருவருடன் ஒருவர் சேரவொட்டாமல் செய்வதோடு நமக்கு எவ்வளவு கேடு செய்யவேண்டுமோ அவ்வளவையும் செய்து வருவதன்றி, [illegible] நம்மைப் பிரித்து வைத்து [illegible] ஆதரவற்றவர்களாக்கி வைத்திருக்கின்றன, என்றாலும் இன்று இங்கு ஒரு கூட்ட பார்ப்பனர்களும், [illegible] பெற்ற வக்கீல்களும், காவி உடைதரித்த சில சாமியார்களும் எனது கொள்கைகள், ஆசைகள் சம்பந்தமான பெரும்பாலான பிரச்சினைகளை ஆதரிக்கும் அறிகுறியோடு கைதட்டும் ஒலிகளும், காட்டும் அன்பும், ஆரவாரமும் நம் இருவருடைய நிலைமையும் ஒன்று என்பதையும், ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் என்ற முயற்சிகளையும் காண நேர்ந்ததை உண்மையிலேயே ஒருபெரும் பேறாகவே கருதி அளவிலா ஆனந்தம் கொள்ளுகிறேன்.

எப்படி ஒரு அன்னிய ஏகாதிபத்தியமானது, ஒரு நாட்டு மக்களை தங்கள் நலனுக்கு ஏற்றவண்ணம் அடக்கி ஆளவேண்டுமானால், "பிரிவினை செய்து ஆள வேண்டும்" என்பதை கொள்கையாகக் கொண்டு இருக்கிறதோ, அதேபோல் இந்த நாட்டிலுள்ள பழங்குடி மக்களாகிய நம்மை ஒரு அன்னியக்கூட்ட ஆரியர்கள் இந்நாட்டில் பிரவேசித்து நம்மை அடக்கி நம் மீது நிரந்தரமாய் ஆதிக்கம் செலுத்துவதற்காகவே கடவுள் மதம் வேதம், சாஸ்திரங்கள் என்பவற்றின் பேரால் நம்மை பல வகுப்புகளாக பிரித்து வைத்துவிட்டார்கள். இதனால்தான் இந்த நாட்டு பழங்குடி மக்களும் சகல விதத்திலும் செல்வமும் வீரமும் உள்ள சக்தி பொருந்திய பெரும்பான்மையுள்ள மக்களுமாயிருந்தும் நாம், பிற்பட்ட மக்களாகவும், தாழ்த்தப்பட்ட மக்களாகவும், தொடக்கூடாத மக்களாகவும், மனித [illegible] உரிமையற்ற மக்களாகவும் [illegible] நாட்டிலேயே நாம் ஆக்கப்பட்டு [illegible] கிடக்கிறோம். இந்த நிலையில் இதுவரை [illegible] தோன்றுகிறது. [illegible] நம்முடைய ஈன நிலைமையைக் குறித்து விளக்கிச் சொல்லிக்கொண்டு, சமுதாய சீர்திருத்தம் என்கின்ற பெயரை வைத்து எத்தனையோ பேர் எவ்வளவோ வேலை செய்திருக்கிறார்கள் என்பது உண்மைதான், என்றாலும் அவர்களில் எவரும் வெற்றி பெறாமலே போய் இருக்கிறார்கள். ஏன்? என்றால் அவர்கள் அத்தனை பேரும் இருக்கிற குறைபாடுகளை நீக்கவேண்டும் என்று கருதுகிறார்களே ஒழிய, அவை ஏற்படுவதற்கு அடிப்படையான மூலகாரணம் என்ன என்பதைப் பற்றி சிந்தித்து அதைக் கண்டுபிடிக்க முயற்சிக்கவேயில்லை. ஆகையால் இன்று நான் சொல்லுவது என்னவென்றால், நமது சமுதாயத்திலுள்ள இழிவுகளையும் குறைபாடுகளையும் ஒழித்து நம்மை மனிதத் தன்மைக்கு அருகதை உடையவர்களாக ஆக்கவேண்டும் என்று கருதுகிறவர்கள் இந்நிலைக்குக் காரணம் என்ன? எதனால் நாம் இக்கேவலமான நிலைமையை இந்தப் பகுத்தறிவு சமதர்ம காலத்திலும் சுமந்துகொண்டு இருக்கிறோம்? என்பதைக் கண்டுபிடிக்க முயல வேண்டும் என்பதேயாகும்.

எனக்கு வயது இன்று 67. நான் சென்ற 40 வருஷ காலமாக நமக்குள்ள சமுதாயக் குறைகளையும், இழிவுகளையும் ஒழிக்க வேண்டுமென்ற துறையில் உழைத்து வந்திருக்கிறேன். எனது குடும்பமும் ஒரு வைதீகக் குடும்பமாகும். குடும்பத்தில் எவ்வளவோ கோவில் கட்டுதல், சத்திரம் கட்டுதல், அன்னதானம் செய்தல் முதலிய பல காரியங்கள் செய்திருப்பதோடு, இத் தர்மங்களுக்கு சொத்துக்களும் எழுதி வைத்து இருக்கிறார்கள் என்ற போதிலும்,

அப்படிப்பட்ட குடும்பத்தில் பிறந்த நான் இந்த மத மக்களால் ஒரு புரட்சிக்காரனென்றும் தீவிர கிளர்ச்சி செய்கிறவன் என்றும் சொல்லப்படுகிறேன். காரணம் என்னவென்றால் நம் [illegible] எவ்வளவு காலத்திற்கு நாம் இந்து மதத்தையும், இந்து கடவுள்களையும், இந்து சாஸ்திரம், புராணம், வேதம்,

இதிகாசம் முதலியவைகளையும் நம்பி பின்பற்றிக்கொண்டு இருக்கிறோமோ அதுவரையில், நாம் தாழ்த்தப்பட்டவர்களாகவும், பிற்படுத்தப்பட்டவர்களாகவும் சம உரிமைக்கு அருகதையற்றவர்களாகவும் இருப்பதிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியவே முடியாது. அந்தமாதிரி அமைப்புகளில் இருந்து வெளியேறாமல் அவைகளை நம்பி பின் பற்றி நடந்து வந்தவர்களில் ஒருவராவது அவர்கள் வேறு வழிகளில் எவ்வளவு முயற்சித்தவர்களாய் இருந்தாலும் எவ்வளவு பெரியவர்களாக ஆகி இருந்தாலும் அவர்களுக்கு ஏற்பட்ட இழிவிலிருந்து தப்பித்துக் கொண்டவர்கள் இல்லவே இல்லை என்பதை ஒவ்வொரு சீர்திருத்தவாதி, என்பவனும் நன்றாக உணர வேண்டும் என்று சொல்லி வருகிறேன். இதனாலேயே நான் நாத்திகன் என்று கூட சொல்லப்படுகிறேன்.

தோழர்களே! நான் ஏன் இப்படிச் சொல்லி வருகிறேன் என்றால், ஜாதி முறைகள் என்பவை எல்லாம் இந்து மதத்தினுடைய சிருஷ்டியே ஆகும். இந்த கடவுள்கள் பேராலும், சாஸ்திரங்கள் பேராலுமே தான் அவை நிலை நிறுத்தப்படுகின்றன. மருந்தளிக்கிற சில சமுதாய சீர்திருத்தக்காரர் என்பவர்கள் இப்படிப்பட்ட கடவுள் மத சாஸ்திரங்களுக்கும், இந்து மதத்திற்கும், வேதாந்தமும், தத்துவார்த்தமும் சொல்லி இதை ஏற்படுத்தினவர்களுக்கு நல்ல பிள்ளைகளாக ஆவதற்கு முயற்சிப்பார்கள். இந்த அறிவீனமும், மோசமும், தந்திரமும் ஆன காரியங்களால் தாங்கள் மாத்திரம் மரியாதை அடைவார்களே தவிர சமுதாயத்தின் இழிவை போக்க ஒரு சிறிதும் பயன் படாது. ஆகையால் உங்களுக்கு முதலாவதாக நான் என்ன சொல்லுகிறேன் என்றால், நீங்கள் உங்களுடைய நிலையை சிறிதாவது மாற்றிக்கொள்ள வேண்டும் என்று உண்மையாய் ஆசைப்படுவீர்களானால், இந்து மதம் என்பதையும் அது சம்பந்தப்பட்ட கடவுள், மத, புராண, சாத்திர, இதிகாசம் என்பவைகளையும் உதறித்தள்ளி அதிலிருந்து வெளியாகுங்கள். அதைச் சொல்லவே தான் நான் இவ்வளவு கஷ்டப்பட்டு இங்கு வந்திருக்கிறேன். நீங்கள் அதைச் செய்யவில்லையானால் இனியும் ஓர் ஆயிரம் ஆண்டிற்குக்கூட நீங்கள் எப்படிப்பட்ட மகாத்மாக்களும், சங்கரர்களும், பிரசாரங்களும், கிளர்ச்சிகளும் நடந்தாலும், எவ்வளவு தான் அரசியல் சுதந்திரமும், பொருளாதார முன்னேற்றமும், பட்டம் பதவிகளும் பெற்றாலும் உங்கள் சமுதாயத்திற்குள்ள இழிவு நீங்கப் போவதில்லை, இது உறுதி உறுதி. உங்களுக்கு முன் முயற்சித்தவர்கள் செய்த தவறுகளையே நீங்களும் செய்துகொண்டு இருந்தால், உங்கள் வாழ்நாளிலும் அவர்களைப் போலவே தவறு செய்யத்தான் முடியுமே ஒழிய திருத்தம் காணமுடியவே முடியாது. மலைக்காய்ச்சலால் அவதிப்படும் மக்கள் கொயினா சாப்பிட்டு வருவதையே அதற்கும் பரிகாரம் என்று கருதுவார்களேயானால் அம்மக்களுக்கு மருந்து சாப்பிடுகிற வேலையும், மருந்து வியாபாரிகளுக்கு லாபம் கிடைக்கிற வேலையும் தான் நடைபெறுமே தவிர, அவர்களுக்கும் அவர்கள் சந்ததிகளுக்கும் மலைக்காய்ச்சல் ஏற்படுவது தடுக்கப்பட மாட்டாது.

உண்மையில் மலைக்காய்ச்சலை ஒழிக்கவேண்டுமானால் மலைக்காய்ச்சலுக்கு ஆதாரமான, அதை உற்பத்தி செய்கிற கொசுப்பூச்சிகள், கிருமிகள் முதலியவைகளை ஒழிக்கவேண்டும். இவைகள் ஒழிக்கப்படவேண்டுமானால், மறுபடியும் அவைகள் உற்பத்தியாகாவண்ணம் சதுப்பு நிலங்களையும், குட்டைகளையும் நெருப்பு வைத்து எரித்து, அழுக்குத் தண்ணீர் குட்டைகளை மூட ஆகவேண்டும். அது போலவேதான் நம் சமுதாய இழிவுக்கு காரணங்களாய் இருக்கிற எப்படிப்பட்ட மதத்தையும், கடவுள்களையும் ஆதாரங்களையும் நாம் அடியோடு அறுத்தெறிந்த தீர வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

இந்து மதத்தையோ, அதுசம்பந்தமான கடவுள், மதம், சாஸ்திரம், இதிகாசம், புராணங்களையோ சீர்திருத்தி விடலாம் என்று நினைப்பது வீண் வேலையும், ஏமாந்து எழுந்த முட்டாள்தனமுமேயாகும்.

சரியானவழி — புத்திசாலித்தனமான வழி-என்னவென்றால் அதிலிருந்து தப்பித்துக்கொள்வதுதான். அதாவது, இந்து மதத்தைவிட்டே வெளியேறிவிடவேண்டியதுதான்.

அதாவது இந்துமதம் என்பதற்கு வேறு வார்த்தை சொல்லவேண்டுமானால் ஆரியம், பார்ப்பனியம் என்று தான் சொல்லவேண்டும். உங்களுக்கு சந்தேகமிருந்தால் ஆராய்ச்சி புத்தகங்களையும் அறிஞர்களால், ஆராய்ச்சி நிபுணர்களால், எழுதப்பெற்ற ஆராய்ச்சிக் குறிப்புகளையும், பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள். இதை நீங்கள் யாவரும் நன்றாய் ஞாபகத்தில் வையுங்கள். ஆடம்பரங்களைக்கண்டு ஏமாந்துவிடாதீர்கள். புத்தர், சங்கரர், ராமானுஜர் போன்றவர்களின் முயற்சிகள் என்ன ஆயின? புத்தரை ஒழிக்கவே, இராமன், கிருஷ்ணன், இராமாயணம், கீதை, புராணங்கள், அவை சம்பந்தப்பட்ட கோவில்கள் முதலியவை கற்பிக்கப்பட்டன. இராமாயணத்தையும், கீதையையும், பிற சாத்திரங்களையும், ஆதரித்து பிரசாரம் செய்யவே சங்கரர், ராமானுஜர்கள் தோன்றி வந்தார்கள். அவர்களைப் பின்பற்றிதான் ஆழ்வார்களும், நாயன்மார்களும், பக்தர்களும், தாசர்களும், மகாத்மாக்களும், ஆனந்தாக்களும், சுவாமிகளும் தோன்றினர். இதை உணர்ந்தவர்கள் தான் இன்று இவ்வளவு மனித சமுதாய சீர்திருத்தத்திற்கு ஒரு சவாலாக தடையுடையவர்களாவார்கள்.

சமீபத்தில் தோழர் அம்பேத்கார் அவர்கள் சென்னையில் வந்திருந்தபோது என் வீட்டில் இது சம்பந்தமாக நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்ததிலிருந்தும், பஞ்சாப், லாகூரிலிருந்து, ஜாத்பாத் தோரக் மண்டலத் தலைவர் சந்தராம் அவர்களும், முன்பு காரியதரிசியாய் இருந்த ஹரிபகவான் அவர்களும் உங்களைப் பற்றி எனக்கு எழுதிய சில கடிதங்களிலிருந்தும், உங்கள் காரியதரிசியினுடைய சில குறிப்புகளிலிருந்தும் நீங்கள் நான் சொல்லும் இந்த வார்த்தைகளைப் பொறுமையாய்க் கேட்கக் கூடியவர்கள் என்றும், அந்த நிலைமையிலிருந்து விடுபடச் சீர்திருத்தக்கூடியவர்கள் என்றும் தெரிந்ததினால் இவ்வளவு ஆயிரம் பேர் கொண்ட இந்த மாபெரும் கூட்டத்தில் இதை நான் சொல்லுகிறேன். எங்கள் நாட்டில் நான் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவனாய் இருந்த 1922-வது வருடத்திலேயே ஒரு பெரிய மகாநாட்டில் "இராமாயணம் கொளுத்தப்பட்டால் ஒழிய தீண்டாமை ஒழியாது" என்று சொல்லி இருக்கிறேன். பல பேர்களுக்கு அன்று ஆத்திரமாய் இருந்தது. இன்று எங்கள் நாட்டில் இப்படிப்பேசுவதும், கொளுத்துவதும் சர்வசாதாரணமாய் ஆகிவிட்டது. இராமாயணத்தைக் கொளுத்த ஒரு கூட்டமும், அதை ஆதரிக்க ஒரு கூட்டமும் இருவரும் போட்டிக் கூட்டம் கூட்டி பேசி வருகிறார்கள்.

மற்றும் பதினாயிரக்கணக்கான சுயமரியாதைக்காரர்கள் இந்து மதத்தை விட்டு வெளியேறிவிட்டார்கள் என்றே சொல்லலாம். தங்கள் கடவுளின் பெயர்களை எல்லாம் மாற்றிக்கொண்டார்கள். இந்து மத அறிகுறியாய் இருக்கிற சின்னங்களை எல்லாம் விட்டுவிட்டார்கள். பண்டிகைகளை எல்லாம் தாங்கள் பகிஷ்கரித்துக்கொண்டதுமல்லாமல் பிறருக்கும் பகிஷ்கரித்துவிட்டார்கள். அநேகர் புராணப் பண்டிகைகளையும் உற்சவங்களையும் கொண்டாடுவதில்லை. இதற்குமுன்பு ஏழைகள் பணத்தை வஞ்சித்துக்கொள்ளை அடித்த பணக்காரர்கள் இதற்கு முன்பு கோயில் கட்டி வந்ததை நிறுத்திவிட்டு, பள்ளிக்கூடம் முதலிய காரியங்களில் செலவிட்டு வருகிறார்கள். சென்னையில் தாங்கள் இந்துக்கள் அல்லவென்று அநேகம்பேர் சொல்லிவிட்டார்கள், புராண நாடகங்களையும், சினிமாக்களையும், பஜனைப் பாட்டுகளையும் ஜனங்கள் வெறுக்கத் தொடங்கிவிட்டார்கள். கூடிய சீக்கிரத்

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

மாவட்டந்தோறும் மாணவத்தோழர்கள்

திருநெல்வேலி

24-12-44 அன்று மாலை 7-30 மணிக்கு தூத்துக்குடி திராவிடர் கழகச் சார்பில் சிம்சானா நகுலை மைதானத்தில், தோழர் பலவேசம் தலைமையில் தோழர்கள் பி. ஜனார்த்தனமும், எஸ். தவமணி இராசனும் சொற்பொழிவாற்றினார்.

26-12-44 எட்டயாபுரம் முத்தாலையம்மன் கோவில் மைதானத்தில், இரவு 9-மணிக்கு தோழர் எம். எஸ். சிவசாமி தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் தவமணிஇராசன் ஜனார்த்தனம், ஆசிரியர் அழகப்பழகன், பி. பெருமாள் ஆகியோர் விரிவாகப் பேசினபின் செயலாளர் எம். ஆத்தியப்பன் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

28-12-44 அன்று கோட்டாறு சுயமரியாதை வாசிப்புச்சாலையின் ஆதரவில் தோழர் அருணப்பர் பி. ஏ., தலைமையில் தோழர்கள் நெடுஞ்செழியன், அன்பழகன், சனார்த்தனம், தவமணிஇராசன் ஆகியோர் விரிவுரை நிகழ்த்தினார்கள்.

தென்னாற்காடு (முதல் பகுதி)

26-12-44 மாலை தோழர் எ. கே. இராமநாதன் தலைமையில் தோழர்கள் நடேசன், வெற்பாசன், நாராயணன், மதுரைத் தமிழாசிரியர் ஆ. வீரவாகு, ம. சச்சிதானந்தம் ஆகியோர் பேசினார்கள். தோழர் சிதம்பரநாதன் நன்றி கூறினார்.

தென்னாற்காடு (இரண்டாம்பகுதி)

29-12-44 கடலூர் செட்டிகோவிலுக்கெதிரில் மாலை 6-30 மணிக்கு மா. பீட்டர் பி. ஏ. அவர்கள் தலைமையில் திராவிடர் கழகத்தின் சார்பில் நடந்த பொதுக் கூட்டத்தில் தோழர்கள் குடந்தை சாமிநாதன், மதுரை அப்துல் கபூர், ந. தி. அரசன் ஆகியோர் பேசினார்கள். ஆ. திராவிடமணி நன்றி கூறினார்.

புதுவண்டிப்பாளையத்தில் 29-12-44 இரவு 9-30 மணிக்கு சுப்பிரமணியர் கோயிலுக்கெதிரில் மா. பீட்டர் பி. ஏ. அவர்கள் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் தோழர்கள் குடந்தை சாமிநாதன், ந. தி அரசன், தண்டபாணி, ஆ. திராவிடமணி ஆகியோர் பேசினார்கள்.

பழமுவண்டிப்பாளையத்தில் 30-12-44 மாலை 7 மணிக்கு [illegible] மலைச்சாலையில் தோழர் கோதண்டராம் அவர்கள் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் ஆ திராவிடமணி, ந. தி. அரசன், புதுவை தமிழ் ஒளி குடந்தை சாமிநாதன், மா. குமாரசாமி ஆகியோர் பேசினார்கள்.

குறிஞ்சிப்பாடியில் 31-12-44 மாலை 7 மணிக்கு வாலிபர் தெருவில் இரா. இளம்வழுதி அவர்கள் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தில்லை திருமாறன், குடந்தை சாமிநாதன், சென்னை மீன்பிடிப்போர் சங்கத் தலைவர் ந. சிவரத்தினம் ஆகியோர் பேசினார்கள். நன்றி கூறலுடன் கூட்டம் முடிவுற்றது.

1-1-45 மாலை 7 மணிக்கு கடலூர் மஞ்சகுப்பம் மைதானத்தில் தோழர் இரா. இளம்வழுதி அவர்கள் தலைமை நடந்த பொதுக்கூட்டத்தில், குடந்தை சாமிநாதன், தில்லை திருமாறன், சென்னை தொழிலாளர் தலைவர் ந. சிவரத்தினம் சொற்பொழிவாற்றினார்கள். ஆ. திராவிட மணி நன்றிகூறினார்.

மாணவத் தோழர்கள் 2-1-45-ல் இரட்டணை மிராசுதார் இராமசாமி செட்டியார் நினைவு நாள் கூட்டத்தில் கலந்துகொண்டு 3-1-45 விருத்தாசலம் திண்டிவனம் வட்டத்தில் சுற்றுப் பிரயாணம் செய்தார்கள்; (விபரம் பின்னர்)

இராமநாதபுரம்

24-12-44 காரைக்குடி திராவிடர் கழகச் சார்பில் கிருஷ்ணா டாக்கீஸில் தோழர் முருகையா தலைமையின் தோழர்கள் வை. நன்மாறன் சு. ப. நாராயணன் ஆகியோர் பேசினர்.

தலைவர் முடிவுரைக்குப் பின் தோழர் எஸ். அருணாசலம் நன்றி கூறினார்.

இம்மாவட்டச்சுற்றுப் பிரயாணத்தில் தோழர்கள் தில்லைப் புலவர் கா. மு. மாணிக்கம். இரா. வில்லாளன் ஆகியோர் கலந்து சொற்பொழிவாற்றினர்.

26-12-44 மாலை 7 மணிக்கு தெம்மாப்பட்டு சமதர்ம செந்தமிழ்ப் பள்ளியின் முன் தோழர் எஸ். அருணாசலம் தலைமையில் நம் பிரசாரக் குழுவினர் சொற்பொழிவாற்றினர். ஆசிரியர் முருகையர் நன்றி கூறினார்.

27-12-44 காலை 10-மணிக்கு புலவர் மாணிக்கம் தலைமையில் காளையார்கோவி லில் திராவிடர் கழகம் தொடங்கப்பட்டது.

27-ந் தேதி மாலை 11 மணிக்கு காளப்பூர் விவசாயிகள் சங்கத்தில் நடந்த கூட்டத்தில் புலவர் மாணிக்கம் தலைமையில் தோழர் வில்லாளன் பேசினார். செயலாளர் நன்றி கூறினார்.

27-12-44 இரவு $9\frac{1}{2}$ மணிக்கு சிறுகுடியில் தோழர் சிவஞ்சசதி தலைமையில் புலவர் மாணிக்கம், இரா. வில்லாளன், இராம. சுப்பையா ஆகிய தோழர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

28-12-44 சண்முகநாதபுரம் கடைவீதியில் இரவு 9 மணிக்குத் தோழர் சீனிராகவன் தலைமையில் நம் பிரசாரக் குழுவினர் விரிவுரையாற்றினர்.

29-12-44 அருப்புக்கோட்டை தியாகராய வாலிபர் சங்கத்தின் முன்பு தோழர் டி. கே. சுப்பிரமணியம் தலைமையில் இரவு 9 மணிக்கு பிரசாரக் குழுவினரும், தோழர் ராம. சுப்பையாவும் பேசினார்கள். தோழர் எம். எஸ். ராமசாமி நன்றி கூறினார்.

30-12-44 மாலை 7 மணிக்கு முத்துராமலிங்கபுரம் பகுத்தறிவுக் கழகத்தில் தோழர் சிவ. சண்முகசுந்தரம் தலைமையில் திராவிடர் கழகம் தொடங்கப்பெற்றது.

அன்றிரவு $9\frac{1}{2}$ மணிக்கு கரிசைக்குளம் கிறித்துவப்போதகாசிரியர் தலைமையில் பிரசாரக் குழுவினரும், தோழர்கள் டி. கே. சுப்பிரமணியன், இராம. சுப்பையா ஆகியோரும் பேசினர். தோழர்

31-12-44 காலை 11-க்கு கமுதியில் தோழர் சிவ. சண்முகசுந்தரம் தலைமையில் திராவிடர் கழகம் தொடங்கப்பட்டது.

அன்றிரவு 9-30-க்கு தோழர் சண்முகசுந்தரம் தலைமையில் பிரசாரக் குழுவினருடன் தோழர் பி. வெள்ளைச்சாமியும் சொற்பொழிவாற்றினார். தோழர் இராமசாமி நன்றி கூறினார்.

இம்மாணவர் சுற்றுப்பிரயாணத்தில் தத்தம் ஊர்களில் கூட்டம் நடத்தி ஆதரித்து உதவிய எல்லாத் தோழர்களுக்கும் காரைக்குடி தோழர் இராம. சுப்பையா அவர்கள் நன்றி தெரிவிக்கிறார்.

திருச்சி

31-12-44 அன்று சேப்பாப்புதூரில் தோழர் எஸ். கே. பி. முத்துராசா வீட்டில் நிகழ்ந்த ஈருகால வாதணி விழாவில் தோழர்கள் அ. மா. பெரியசாமி, வை. நன்மாறன், இ. திருமாறன் ஆகியோர் விரிவான சொற்பொழிவுகள் செய்தார்கள்.

1-1-45 அன்று மாலை குளித்தலை வையாபுரி வானொலி மைதானத்தில் தோழர் எஸ். சதாசிவம் தலைமையில் தோழர்கள் அ. மா. பெரியசாமி, வை. நன்மாறன், ஆ. வி. அங்கமுத்து, ராஜா செழியன், ஜி. என். ராயுடு ஆகியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். தோழர் இ. திருமாறன் நன்றிகூற இரவு 9-30 மணிகளுக் கூட்டம் இனிது முடிந்தது.

2-1-45 மாலை 6-30 மணிக்கு கரூர் அமராவதி ஆற்றங்கரையில் மாணவத் தோழர் பெ. சேரமு தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் அ மா. பெரியசாமி, வை. நன்மாறன், பி. கே. ஐயா ஆகியோர் பேசினர் கருத்துக்கு மாறாகப் புலவர் முருகனார் பேசியதால் [illegible] விடையளித்து [illegible] திருத்தியெனக் கூறுமாறு [illegible]னர். தோழர் ஐயா நன்றிகூற கூட்டம் இரவு 10மணிக்கு முடிந்தது.

(தொடரும்)

ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

வேண்டுகோள்

தஞ்சை மாவட்ட தோழர்களுக்கு,

பட்டுக்கோட்டை தோழர் செ. கந்தசாமி விடுத்துள்ள வேண்டுகோளில், நம் ஜில்லாவில் இதுவரை 4000 அங்கத்தினர்களைத்தான் சேர்த்திருக்கிறோம். இதர ஜில்லாக்கள் போட்டியிடுகின்றன. இப்போட்டியில் தஞ்சை இரண்டாவதாகவோ மூன்றாவதாகவோ தள்ளி விடப்படுமோ என்று அஞ்சுகிறேன். ஆதலால் இதுவரை காட்டியது போலவே, இன்னும் சிறிது ஊக்கம் காட்டி போட்டியில் வெற்றி பெற்று நமது ஜில்லாவுக்கு வெள்ளிக் கோப்பையைப் பரிசாகப் பெறும்படி வேண்டிக்கொள்கிறேன் என்று குறிப்பிடுகிறார்.

* *

உறையூர் தோழர்களுக்கு,

உறையூர் திராவிட இளைஞர் கழக செயலாளர் தோழர் கே. சுந்தரம் விடுத்துள்ள வேண்டுகோளில்,

"சேலம் ஜஸ்டிஸ் கட்சி மாகாண மாநாட்டின் தீர்மானங்களை ஒப்புக்கொண்டு நீங்கள் திராவிடர் மத்திய கழகத்தில் அங்கத்தினராகச் சேர்ந்துவிட்டீர்களா?, இல்லையானால் கீழ்காணும் இடங்களுக்குச் சென்று 4 அணா கொடுத்து உங்களை பதிவு செய்து கொள்ளுங்கள்.

இடங்கள்:

1. கே. சுந்தரம், டாக்கர் ரோடு, உறையூர். (காணும் நேரம் காலை 9 மணி வரையில், மாலை 6 மணிக்கு மேல், ஞாயிற்றுக்கிழமை எந்நேரமானாலும்)
2. எ. அமிர்தலிங்கம், சவுக்குத் தெரு, டாக்கர் ரோடு, உறையூர். (எல்லா நேரத்திலும் எந்த நாளிலும்)" என்று குறிப்பிட்டுள்ளார்.

* *

காரைக்குடி தோழர்களுக்கு,

காரைக்குடி திராவிட கழகத்தார் வெளியிட்டுள்ள வேண்டுகோளில்,

"நமது நகர் திராவிடர் கழகத்தில் இதுவரை அங்கத்தினராகச் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை சுமார் 400 பேர்களுக்கு மேல்தானிருக்கும். என்ற போதிலும் ஆர்வமுள்ள தோழர்கள் அவரவர்கட்கு வேண்டிய தோழர்களை எல்லாம் சேரும்படி செய்வதோடு நம் இயக்கப் பத்திரிகைகளை ஆதரித்து வரும் தோழர்கள் இன்னும் பலரை ஆதரிக்குமாறு தூண்ட வேண்டு"மென்று கேட்டிருக்கிறார். மேலும் குறைந்தது 500 பேர்களையாவது இக்காரில் சேர்த்து பெரியார் அவர்களை வரவழைத்து மக்கட்கு சொற்பொழிவாற்றச் செய்யவேண்டுமென்றும் தாம் விரும்புவதால் 500 அல்ல 1000 அங்கத்தினரைச் சேர்த்து விட்டோம் என்பதை எடுத்துக்காட்ட வேண்டுமென்று குறிப்பிடுகின்றார்.

தலைவர்கள் படங்கள்

பெரியார், அண்ணாதுரை, நெடுஞ்செழியன், டாக்டர் ஜனார்த்தனம், அன்பழகன் இவர்களது படங்கள் தயாரிக்கிறது. ஒன்றின் விலை 0—1—0. வேண்டுவோர் எழுதுக; அதிக ஆர்டருக்கு தக்க கமிஷனுண்டு. எல்லா "குடி அரசு", "திராவிட மணி" "திராவிட நாடு" ஏஜெண்டுகளிடமும் கிடைக்கும்.

திராவிடன் பதிப்பகம்,
133–லாங்கு பசார், வேலூர். (வ. ஆ.)

மதுரை வம்பர்கள்

காட்டின் நிலை தெரியாது காடோடி பேச்சுகளையும், இனத்தின் நோக்கம் தெரியாது ஆரியனது பாதங்களுக்கு முத்தம் கொடுக்கும் சில உதவாக்கரைகள் தமிழர் பெயரால் 7-1-45-ல் ஓர் மாநாட்டைக் கூட்டி, சுயமரியாதை இயக்கத்தினர் கூறும் இராமாயணத்தையும், திராவிடர் என்கின்ற பதத்தையும் மக்களிடம் கூறி ஒழித்துவிடலாம் என்று எண்ணி சில தருதலை(மு)க்கள் மூலமும் வேலையில், நல்ல வேளையாகத் தோழர் சத்தியேந்திரன், மேடை மீது பேசும். திராவிடர் என்னும் பதத்துக்கு சரித்திர ஆதாரமும், திராவிட தலைவர் பெரியார் செய்து வரும் புரட்சி வேலைகளைக் கூறினதும் காட்டுமிராண்டிகளை எழுச்சியில் கொண்டு வந்துவிட்டது. தமிழர் கூட்டத்தினருக்கு அதிர்ச்சி உண்டாக்கிவிட்டது. திராவிடர் சொல்லுக்கு (சூத்திரன்) அல்லது திருடன் என்றும் தமிழர் சொல்லுக்குத் தனிப் பொருள் உண்டு என்று கொண்டு வந்த தீர்மானம் நிறைவேற்றாது கூட்டத்தில் இருந்த திராவிடத் தோழர்களுக்கும், தமிழர் மாநாட்டினருக்கும் பலத்த குழப்பம் ஏற்பட்டு நாங்கள் திராவிடர்கள். திராவிடநாடு வாழ்க, பெரியார் வாழ்க என்ற இன்னொலியுடன் தீர்மானம் எடுக்கப்பட்டு போய்விட்டது. இது திராவிட மாணவர்களின் முதல் வெற்றி. இராமாயணத்தைக் காப்பாற்றும் வாரிகளுக்கும், திராவிடர் மீது பழி சுமத்தும் கதர் சட்டை தொண்டர்களுக்கும், மூ. ரா. ஜோஷிடர்க்கும், இன்னும் சில அபூர்வ பிறவிகளுக்கும் திராவிடர் பதத்திற்கு அர்த்தமே தெரியவில்லை போலும். இவர்களுக்கு ஓர் தமிழ் மன்றமாம், கலையை உயர்த்தப் பாடுபடுகிறார்களாம். இனியாவது நமக்கு ஒற்றுமை தேவை என்பதை மதுரை வம்பர்கள் உணர வேண்டுமென்று தோழர் ந. சிவஞானம் தெரிவித்துக் கொள்கிறார்.

விஜயபுரத்தில் பொங்கல் தமிழர் திருநாள்

15-1-45 திங்கட்கிழமை மாலை 6-மணிக்கு விஜயபுரம் எல்லையம்மன் கோவில் சன்னதி தெருவில் தை திருநாள் கொண்டாடப்படும். அதுகாலை தோழர்கள் பண்டித பி. ஆர். மீனாட்சிசுந்தரம் எம். ஏ., கரந்தை புலவர் கல்லூரித் தலைவர் அவர்களும், கரந்தை புலவர் தோழர் கே. சி. பெரியசாமிப் புலவர் அவர்களும் மற்றும் பல தோழர்களும் சொற்பொழிவாற்றுவார்கள். அனைவரும் வருக.

திராவிட கழகம், திருவாரூர்.

செவ்வாய்ப்பேட்டை திராவிடர் கழகம்

2-ஆம் ஆண்டு நிறைவு விழா

தை விழா 14-1-45 ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு தேவாங்கப் பாடசாலையின் எதிரே தோழர் எஸ். மீனாட்சிசுந்தரம் பி. ஏ. எல். டி., தலைமையில் நடைபெறும்.

அதுகாலை பெரியார் ஈ.வெ.ரா., தோழர்கள் க. அன்பழகன், பி. ஜனார்த்தனம், தவமணிராசன், கே. தியாகராசன், அறிவுடைநம்பி, கே. எழில்கோ, வீரமணி (10 வயது சிறுவன்) மற்றும் பலர் கலந்து அறிவுரையாற்றுவார்கள்.

எஸ். ராசமாணிக்கம்,
தலைவர்.
எம். எல். கந்தசாமி,
செயலாளர்.

திருச்சி ஜில்லா தெ. இ. ந. உ. சங்கம்

திராவிடர் கழகமாக மாறியது

திருச்சி ஜில்லா தெ. இ. ந. உ. சங்கம் (ஜஸ்டிஸ் பார்ட்டி) பொதுக் கூட்டம் 7-1-45 ஞாயிற்றுக்கிழமை காலை 10-மணிக்கு கருணாநிதி மார்க்கில் தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் தலைமையில் கூடியது.

சேலம் மாகாண மாநாட்டின் தீர்மானித்தபடி இந்த தென் இந்திய நலஉரிமைச் சங்கம் (ஜஸ்டிஸ் பார்ட்டி) என்பதை திருச்சி ஜில்லா திராவிடர் கழகமாக மாற்றப்பட்டதென்று தீர்மானிக்கப்பட்டது. இது தலைவரால் கொண்டு வரப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

திருச்சி நகர் திராவிடர் கழகத்திற்கு (கரா ஜஸ்டிஸ் பார்ட்டி) கீழ்க்கண்டவர்களை தேர்ந்தெடுக்கப்பட்டது.

தோழர்கள் என். சங்கரன் தலைவராகவும், தி. திரவியம் உபதலைவராகவும், டி. எம். முத்து செயலாளராகவும், வி. வி. சுந்திரம் துணைச்செயலாளராகவும், கே. கே. சாமி பொருளாளராகவும் மற்றும் 22-திராவிடக்கழக உறுப்பினர்களையும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

பிரரேபித்தவர்: தோழர் அ. மா. ஞானமாமலை,

ஆமோதித்தவர்: சுலைமான்.

திருச்சி ஜில்லா திராவிடர் கழகம் 1945ம் ஆண்டுக்கு கீழ்கண்டவர்களை நிர்வாகிகளாக தீர்மானிக்கிறது.

தலைவர்: தோழர் எம். எ. அருணாசலம் செட்டியார்.

உபதலைவர்கள்: தோழர்கள் எ. அன்முத்து அம்பலகாரர், பெருமாள் நாடார் (புலியூர்), எம். கணேசன் (கரூர்)

செயலாளர், பொருளாளர்:- தோழர் தி. பொ. வேதாசலம்.

மற்றும் 26-கழக உறுப்பினரையும் தெரிந்தெடுக்கிறது.

பிரரேபித்தவர்: தி. திரவியம்.

ஆமோதித்தவர்: லக்ஷ்மணய்யர்.

தலைவர் நன்றிகூறலுடன் கூட்டம் இனிதாய் முடிந்தது.

இந்தப் புதிய ஆண்டில்

நீங்கள்

★

செய்துகொள்ள வேண்டிய

நன்முடிவு

யாதெனில்

★

"மே. த. கவர்னரின்

யுத்த நிதிக்கு

நான் மாதந்தோறும் நன்கொடை

அளித்து வருவேன்"

என்பதுதான்

"பொங்கல் மலர்"

யாம் எமது கழகங்களினின்றும் 'பொங்கல் மலர்' ஒன்றை வெளியிட்டுள்ளோம்.

அதன் கண் பல அறிவுடைய கவிதைகளும் கட்டுரைகளும் அழகுற அமைந்துள்ளன. அழகிய பதிப்பு, அறிவுக் களஞ்சியம். வேண்டுவோர் மலர் ஒன்றுக்கு மூன்று அணா அஞ்சற்றலை (Stamp) அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும்.

கிடைக்குமிடம்: N. S. சண்முகவடிவேல், தஞ்சை திராவிடர் கழகம் கரந்தை, தஞ்சை.

இங்ஙனம்,

தஞ்சை திராவிட கழகத்தார்,

கரந்தை.

மறுமலர்ச்சி மன்றத்தார்.

குறிஞ்சிப்பாடி பஞ்சாயத்து போர்டு

காங்கரஸ் தலைவர் நீக்கம்

குறிஞ்சிப்பாடி பஞ்சாயத்து போர்டு ஊழல் மலிந்து சரிவர நடத்தப்படாததால் மேற்படி பஞ்சாயத்துபோர்டு தலைவர் என். கே. வேலாயுத முதலியார் (காங்கரஸ்) தலைமைப் பதவியிலிருந்து சர்க்காரால் நீக்கப்பட்டார். 29-12-44-ல் நடந்த தலைவர் தேர்தலில் தோழர் பி. முத்தையா முதலியார் ஓட்டுகள் பெற்று தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். எதிர்த்து நின்ற காங்கரஸ் தோழர் அம்பலவாண முதலியார் நான்கே ஓட்டுகள் பெற்று தோல்வியுற்றார் எனத் தோழர் ஆர். சரவணன் அறிவிக்கிறார்.

குடி அரசு

1945-ஆம் ஜனவரி-மீ 13-உ.

வட நாடும்— ஆரிய எதிர்ப்பும்

வட நாட்டில் தென்னாட்டைப் போலவே ஆரிய எதிர்ப்புக் கிளர்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால் அவைகளை ஆரியப் பத்திரிக்கைகள் வெளியிடாமல் அடக்கிவருவதோடு வெளி மாகாணங்களுக்கு அந்தச் சேதி பரவாமல் இருக்கவும், கிளர்ச்சி ஸ்தாபனங்களைக் கைப்பற்றவும் ஏராளமான பணச் செலவுகளும், பலமான முயற்சிகளும் செய்து இடையூறு விளைவித்து வருகின்றன.

உதாரணமாக பஞ்சாப் மாகாணத்தைச் சேர்ந்த லாகூரில் சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு "ஜாதியை ஒழிக்கும் சங்கம்" "ஜாத்பத் தோடக் மண்டல்" என்று ஒரு ஸ்தாபனம் ஏற்படுத்தி அதன் மூலம் ஜாதிபேதத்தையும் ஜாதி இழிவையும் போக்கும்படியான தீவிர பிரசாரம் நடந்துவந்தது. அந்த ஸ்தாபனத்திற்கு பெரியார் ஈ. வெ. ராமசாமி உபதலைவராகவும் தெரிந்தெடுக்கப்பட்டார். இந்த சேதி பத்திரிகையில் வெளிவந்தவுடன் தென்னாட்டுப் பார்ப்பனர்கள் ஈ. வெ. ரா. நாஸ்திகர் என்றும், இந்து மதத்தை ஒழிப்பவரென்றும், முஸ்லீம்களுக்கு ஆதரவளிப்பவர் என்றும் அந்த மண்டல தலைவருக்குத் தெரிவித்தார்கள். அதன்மீது மண்டலத்தார் ஈ. வெ. ரா.வை "நீங்கள் இந்து மதத்தை வெறுக்கிறவர்களா?" என்று கேட்டார்கள். அதற்கு ஈ. வெ. ரா., அவர்கள் 'ஜாதிபேதத்தையும் உயர்வு தாழ்வையும் ஒழிக்கவேண்டுமானால் இந்து மதம் மாத்திரமல்ல இந்துமத சாஸ்திர புராண இதிகாசங்கள் யாவும் ஒழிக்கப்பட்டால் ஒழிய முடியாது" என்று காரணங்கள் காட்டி நீண்ட பதில் எழுதினார். அதை மண்டலத்தார் ஒப்புக்கொள்ளாமல் அடுத்த வருஷ தேர்தலில் ஈ. வெ. ரா. பெயரை எடுத்துவிட்டார்கள். அதுமாத்திரமல்லாமல் அதற்குப் பிறகு அம்மண்டல மாநாட்டிற்கு டாக்டர் அம்பேத்காரை தலைவராகத் தெரிந்தெடுத்தார்கள். அவரைப் பற்றியும் இதேமாதிரி புகார்கள் பார்ப்பனர்களால் சொல்லப்பட்டு அம்மண்டலத்தார் டாக்டரைக் கேட்க டாக்டர் அவர்கள் "ஆம் இந்து மதம் ஒழிந்தால்தான் ஜாதி ஒழிய முடியும். ஆதலால் எனது அக்கிராசனப் பிரசங்கத்தில் இந்து மதம் ஒழிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி எழுதி இருக்கிறேன்" என்று தெரிவித்து விட்டார். அந்தக் காரணத்தால் அந்த மண்டலத்தார்கள் அந்த மாநாட்டையே கூட்டாமல்விட்டு விட்டார்கள். டாக்டர் அம்பேத்கார் அவர்கள் அந்த மாநாட்டுத் தலைமை சொற்பொழிவுக்கு எழுதிய சொற்பொழிவுத் தொகுதியை நமக்கு அனுப்பியதில் அதைத் தமிழில் மொழிபெயர்த்து "ஜாதியை ஒழிக்கும் வழி" என்னும் பேரால் புத்தகம் ஒன்று 0-4-0-வுக்கு விற்று வருகிறோம். அதைப்பார்த்தால் இந்துமதம் ஒழியாமல் ஜாதியும் ஒழியாது, சுயராஜ்ஜியமும் வராது, பொதுவுடைமையும் ஏற்படாது என்பதெல்லாம் மடையனுக்கும் விளங்கும்.

கடைசியாக அந்த ஜாத்பத் தோடக் மண்டலத்தையும் இந்து மகா சபையினர் கைப்பற்றி விட்டார்கள். அதாவது இந்து மகா சபையின் குஸ்தாதார் ஆன தோழர் பிர்லா அவர்கள் அதற்கு இரகசிய சர்வாதிகாரியாகவும் இந்துமத வெறிபிடித்த அம்மையாரான தோழர் இராமேஸ்வரிநேரு அம்மையார் தலைவராகவும் ஏற்பட்டு "இந்து சாஸ்திரங்களில் ஜாதிக்கு இடமில்லை" என்பதன் மூலம் புராணப்பிரசாரம் செய்யும் ஸ்தாபனமாக ஆக்கப்பட்டுவிட்டது. இப்போது மறுபடியும் சீர்திருத்தக்காரர்கள் கைக்கு வந்துவிட்டது போல் தெரிகிறது. பழைய காரியதரிசி தோழர் சந்தராம் அவர்கள் தலைவராக வந்து பெரியாருக்கு அழைப்பு அனுப்பி இருக்கிறார். இது போலவே சுமார் 10, 12 வருஷத்திற்கு முன்பிருந்தே கான்பூரிலும் நாகபூரிலும் நாசிக்கிலும், பூனாவிலும் சங்கங்களும் மாநாடுகளும் நடந்துவந்து மனுதர்ம சாஸ்திரம், இராமாயணம் ஆகியவைகள் கொளுத்தப்பட்டுமிருக்கின்றன. வடநாட்டு மாநாடுகளில் தலைமைவகித்த டாக்டர் அம்பேத்கார், திவான்பகதூர் எம். சி. இராஜா, ராவ்பகதூர் என். சிவராஜ் ஆகியோர்கள் தலைமையில் மனுதர்ம சாஸ்திரம், இராமாயண பாரதங்கள் கொளுத்தப்பட்டிருப்பதுடன், "இந்து மதம் என்பதாக ஒரு மதம் இல்லை" என்றும், "அது ஜாதி பேதத்தை ஏற்படுத்தி நிலைநிறுத்தி ஒரு சிறு கூட்டம் பயன்பெற கற்பனை செய்து பேசப்படுகிற போலி மதம்" என்றும், "அது ஒழிந்தாகவேண்டும்" என்றும் அநேக தடவை பேசி இருக்கிறார்கள். அம்பேத்கார் அவர்கள் தாம் வேறு மதத்திற்குப் போய்விடுவதாகவும் பேசி இருக்கிறார். அவருக்கு அதுசமயம் "பெரியார் ஒரு லட்சம் பேராவது பின்பற்றுகிறவர்கள் இல்லாமல் மாறக்கூடாது" என்று தந்தி கொடுத்துத் தடுத்தும் இருக்கிறார். இவைகளைப் பார்ப்பனப் பத்திரிகையாளர்கள் சரியானபடி பத்திரிக்கைகளில் பிரசுரிக்காமல் திரித்தும் விஷமத்தனமாகக் கலவரம் ஏற்பட்டதாகப் பெருக்கியும் கூறி பிரசுரித்து ஏமாற்றி வந்திருக்கிறார்கள்.

இவை தவிர வேறு பல சங்கங்களும் ஆரியத்தையும், ஆரிய ஆதாரங்களையும் கண்டித்துப் பிரசாரம் செய்ய வடநாடுகளில் இருக்கின்றன. லாகூரில் தேவ்சமாஜமென்பதாக ஒரு பெரிய சங்கம் வேதாந்தத்தின் பேரால் அனேகமாக நாஸ்திகத்தையே பிரசாரம் செய்து வருகின்றது. அதற்கும் பல இலட்சக்கணக்கான சொத்துக்கள் இருக்கின்றன. பெரியாரும், தோழர் அண்ணாதுரையும் லாகூர் சென்ற சமயம் அச்சமாஜத்தார் வரவேற்று வரவேற்புப் பத்திரங்கள் வாசித்தளித்து விருந்து செய்து தங்கள் கொள்கைகளைச் சொன்னார்கள். வங்காளத்திலும் சில ஸ்தாபனங்கள் இருக்கின்றன. ஆனால் அவைகளும் பார்ப்பனர்கள் ஆதிக்கத்திலும் இந்துமகாசபையாரின் செல்வாக்கிலும் சிக்கி பிர்லாக்களுக்கு அடங்கிக்கிடக்கின்றன.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

இந்தியாவில் எந்த நாட்டில் ஆரியத்திற்கும் இந்துமதத்திற்கும் எதிரான ஸ்தாபனங்கள் ஏற்பட்டாலும் அவற்றை கைப்பற்ற பிரசாரகர்களும், காலிகளும் தாண்டிப் போட்டுவிடுகிறார்கள். பார்ப்பனர்களும் தேசியமும் குழிதோண்ட ஆரம்பித்து விடுகின்றன. என்றாலும் இப்போது ஒன்றுக்கொன்று சம்மந்தப்பட்ட ஆரிய எதிர்ப்பு சங்கங்கள் இல்லை என்று மாத்திரம் சொல்லலாமே ஒழிய ஆரியத்துக்கு விரோதமாய் துணிந்து தீவிரமாய் கிளர்ச்சிசெய்யும் ஸ்தாபனங்கள் மாகாணம்தோறும் இருந்து வருகின்றன.

உதாரணமாக சென்றமாதக் கடைசியில் கான்பூரில் கூடிய எல்லா இந்திய இந்து பிற்பட்ட வகுப்பார் மகாநாட்டு நடவடிக்கைகளைப் பார்த்தால் எவரும் ஆச்சரியப்படாமல் இருக்க முடியாது.

அங்கும் அந்த மகாநாட்டிலும் தென்னாட்டுப் பார்ப்பனர்கள் வந்து விஷமம் செய்தார்கள் என்றாலும் ஒருவர் பத்திரிகை ரிப்போர்ட்டரானதால் அம்மகாநாட்டார் அவரைக் கண்டிக்க மாத்திரம் செய்தார்கள். மற்றொருவர் விஷமத்திற்காகவே கூட்டத்தில் வந்து பெரியார் பேசும் போது கேள்வி கேட்பதன் மூலம் கலவரம் உண்டாக்க முயன்றார்; ஆதலால் அவரை கூட்டத்தினர் மேலே கைவைக்க ஆரம்பித்தார்கள். பெரியார் கேட்டுக்கொண்டதோடு தென்னாட்டுப் பார்ப்பனர்கள் இப்படித்தான் இந்த மாதிரி இயக்கத்திற்கு எங்கும் தொல்லை கொடுக்கிறார்கள் என்று எடுத்துக்காட்டி இது அவர்களுக்கு இன்றியமையாததாகிவிட்டதென்று சமாதானம் செய்ததின் பின் அவர் சும்மா விடப்பட்டார்.

கான்பூர் மகாநாட்டின் தலைமை வகிக்க அழைத்த டாக்டர் M. N. சர்க்கார் M. A., Ph. D., அவர்கள் இந்து மதத்தை ஆதரித்தும், காங்கரசையும் காந்தியாரையும் புகழ்ந்தும் தனது தலைமை உரையை எழுதிக் கொண்டுவந்து படித்தாலும், அது ஆங்கிலத்தில் இருந்ததாலும் கூட்டத்தினர் பொறுமையாக இருக்க முடியாமல் போய்விட்டது.

திராவிடர் கழகத்திற்கு

(ஜஸ்டிஸ் கட்சிக்கு)

13-1-45ந் தேதி வரை 23399-அங்கத்தினர்கள் ரூ. 2515—3—0 சந்தா

ஜனவரி மாதம் 13ந் தேதி வரை திராவிட கழகத்திற் (ஜஸ்டிஸ் கட்சிக்)கு தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் இருந்து அங்கத்தினர் சேர்த்து தலைமை காரியாலயத்திற்கு அனுப்பப்பட்டிருக்கும் அங்கத்தினர் ரசீதுகளின் எண்ணிக்கையும் அவைகளுக்காக வசூலான சந்தா தொகையும் கீழே குறிப்பிட்டிருக்கிறது.

1. தஞ்சை	4213	9. வட ஆர்க்காடு	1228
2. திருச்சி	3626	10. மதுரை	1097
3. சேலம்	3609	11. செங்கல்பட்டு	488
4. கோவை, உதகை.	2055	12. இலங்கை	165
5. திருநெல்வேலி	1784	13. திருவிதாங்கூர், (நாஞ்சில்நாடு)	137
6. இராமநாதபுரம்	1741	14 பெங்களூர்	125
7. சென்னை	1600	15. புதுக்கோட்டை	59
8. தென் ஆர்க்காடு	1472		

ஆகமொத்த அங்கத்தினர்கள் 23399. சந்தா ரூ. 2515-3-0

இதனாலேயே தலைவர் தனது பேச்சை வாசித்து முடித்த உடன் போய்விட்டார். பிறகு பெரியாரை பிரேரேபித்து தலைமை வகிக்கச் செய்து, பெரியார் தலைமை உரையாக அரைமணி நேரம் பேசினார். (அது முதல் பக்கத்தில் பிரசுரமாகி இருக்கிறது) இந்தப் பேச்சு முடிந்த உடன் பலர் பேசினார்கள். பேசினவர்கள் ஒவ்வொருவரும் சாஸ்திர புராண இதிகாசங்களை கேலிக் கூத்தாக ஆக்கிவிட்டார்கள்.

ஒரு சாமியார் பேசினவர் வேத சுலோகங்களை எடுத்துச் சொல்லி வேதம் காட்டுமிராண்டி காலத்தில் காட்டுமிராண்டித் தன்மையில் பாடப்பட்டது என்று அதிலிருந்து அனேக ஆதாரங்களைக் காட்டி—வேதத்தில் உள்ள தஸ்யூக்கள் தாசர்கள் என்பவர்கள் இந்நாட்டுப் பழங்குடி மக்களாகிய தங்களைத்தான் குறிப்பிட்டதாகும் என்று விளக்கினார்.

மற்றொரு சாமியார் இராமாயணத்தைப் பற்றி பல சுலோகங்களைச் சொல்லி இந்நாட்டுப் பழங்குடிமக்களை ஆரிய எதிரிகள் என்று காட்டவும் அவர்களை எப்படி எப்படி ஒழிப்பது என்பதற்கு வழி சொல்லிக் கொடுக்கவும் ஏற்படுத்தின ஒரு நியதி(Code) என்று எடுத்துக்காட்ட அனேக ஆதாரங்கள் காட்டினார். சூர்ப்பனகையை பங்கம் செய்ததும், வாலியை மறைந்து கொன்றதும், சம்பூகனைக் கொன்றதும், கடவுள் தர்மம் என்று இராமாயணம் காட்டுவதாலேயே அது இந்நாட்டுப் பழங்குடி மக்களுக்கு கேடானது என்று சொல்லி மக்களை சூர்ப்பனகைக்கும், வாலிக்கும், சம்பூகனுக்கும் பல தடவை ஜே போடும்படியும் 'ராமக்கீ நாஸ்' என்று சொல்லும்படியும் செய்தார்.

மற்றொரு சாமியார் பேசும் போது கீதைப் புரட்டின் ஆபாசத்தையும், அதன் வருணாசிரம தத்துவத்தையும் பல சுலோகங்களின் மூலம் விளக்கி "கீதேக்கு நாஸ்" "கீதேக்கு நாஸ்" என்று (அதாவது கீதை ஒழிக என்று) மக்களை பலதடவை சொல்லச் செய்தார். மற்றும் பலர் அனேக புதிய கருத்துக்களுடன் இந்துமத ஆதாரங்களைக் கண்டித்துப் பேசினார்கள். பொதுவாகப் பேச்சுகள் முழுவதும் மூன்று நாளும் இங்கு நடக்கும் சுயமரியாதை மகாநாட்டுப் பேச்சுக்களைவிட அதி தீவிரமாகவும், ஆராய்ச்சி அறிவு உடையதாகவும் இருந்தன.

இதன் பயனாகவே அந்த சங்கம் "எல்லா இந்திய இந்து பிற்பட்டவர்கள் லீக்" என்று இருந்ததை 'இந்திய பிற்பட்ட வகுப்பார் சங்

கம்', (அதாவது பேக்வார்ட் கிளாசஸ் பெடரேஷன் ஆப் இண்டியா) என்று மாற்றப்பட்டதுடன் இந்துக்களில் பிராமணர்கள், க்ஷத்திரியர்கள், வைசியர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிறவர்கள் தவிர்த்து மற்றவர்களுக்கு தனித்தொகுதியும், தனிப் பிரதிநிதித்துவமும் எண்ணிக்கை விகித உத்தியோகமும் கொடுக்கப்படவேண்டும் என்றும் இந்தப்படி கொடுக்கப்படாத சீர்திருத்தம் எதுவானாலும் அது கண்டிக்கப்படும் என்றும் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

இவை மாத்திரமல்லாமல் நடப்பு வருஷத்திற்கு காரியக் கமிட்டித் தலைவராக இருந்து இந்திய முழுவதும் பிரசாரமும் கிளர்ச்சியும் செய்து சங்கத்தை நடத்துவிக்க பெரியார் ஈ. வெ. ரா. அவர்களைத் தலைவராகத் தெரிந்தெடுத்ததாகவும் தீர்மானித்திருக்கிறார்கள். அவ்வளவோடு மாத்திரமல்லாமல் காரியக் கமிட்டியின் தலைவருக்கு (பெரியாருக்கு) மெஜாரிட்டி இருக்கும்படி அவரே சில மெம்பர்களை நியமித்துக்கொள்ள விதியையும் திருத்தினார்கள். 4000 பேர்கள் கொண்ட ஒரு தொண்டர்படையை அமைத்தவும் பத்திரிகை நடத்தவும் கமிட்டிகள் ஏற்பாடுசெய்தார்கள். இவற்றை எல்லா மாகாணங்களிலும் இருந்து வந்திருந்த பல நூற்றுக்கணக்கான பிரதிநிதிகள் மிகுந்த உற்சாகத்தோடு செய்திருக்கிறார்கள்.

கடைசியாக லக்னோவில் உள்ள செல்வ வசதியும் செல்வாக்குள்ள வகீலும் ஆகிய ஒருவரால் மாநாட்டிற்கு ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டது. அது என்னவென்றால்:

இந்தச் சமூகத்தைச் சேர்ந்த எவரும் "தங்கள் பெயர்களோடு பிராமணன், க்ஷத்திரியன், வைசியன் என்கின்ற குறிப்புகளைக் காட்டக் கூடிய (அதாவது சர்மா, வர்மா, குப்தா, சாஸ்திரி ஆகியவை போன்ற) எந்தப் பெயரையும் சேர்த்துக்கொள்ளக் கூடாது" என்பதாக ஒரு தீர்மானம் வந்தது. இந்தத் தீர்மானம் காரியக் கமிட்டிக்கு வராததால் இதை எடுத்துக்கொள்ளக்கூடாது என்று தலைவர் பெரியார் கேட்ட போது ஒரே கூச்சலாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று ஆரவாரம் செய்தார்கள். ஆனால் அக்கூட்டத்தில் உள்ளவர்களில் பலர் மறுத்தனர், கும்பஹார் முதல் பிராமணர்கள் பெயர்களை சர்மா, காஷ்யப்பிராமின் சாஸ்திரி, உபாத்யா, சிங், வர்மா, குப்தா போன்ற வாக்களை ஒட்டவைத்துக்கொண்டும் மொத்தமாகப் பூணூல் போட்டுக்கொண்டும் இருந்ததால் 'கூடாது' என்பதற்குப் பதிலாக "இம்மாநாடு கேட்டுக் கொள்ளுகிறது" என்பதாகத் திருத்தி பிரேரேபித்தார். அது ஒப்புக்கொள்ளப்பட்டது.

இப்படியாக மகாநாட்டு நிலைமை இருக்கின்றது. இதைப் ஆரியப் பத்திரிகைகள் அடியோடு மறைத்துவிட்டன. அம்மகாநாட்டுச் செய்திகள் தலைவர் டாக்டர் சர்க்கார் பேச்சைத் தவிர அதுவும் அவர் இந்துமதத்தையும், காந்தியாரையும், காங்கிரஸையும் ஆதரித்ததைத் தவிர மற்ற பாகங்கள் அநேகமாக மறைக்கப்பட்டுவிட்டன. மற்ற நடவடிக்கைகளும் அடியோடு விடப்பட்டுவிட்டன. அம்மாநாட்டில் ஆரியப் பத்திரிகைகளையும், அசோசியேட்டட் பிரஸ்ஸையும் கண்டித்துப் பேசப்பட்டன. இதிலிருந்து பத்திரிகைகளினால் எவ்வளவு கேடுகளும் போக்கிரித்தனமும் பல காரியங்களும் நடந்து வருகின்றன என்பது விளங்கும்.

எது எப்படி இருந்தபோதிலும் திராவிடநாட்டிலுண்டாகும் திராவிட கிளர்ச்சியும் சுயமரியாதைக் கிளர்ச்சியும் இன்று இந்திய முழுவதுக்கும் தீபோலவே இருந்துவருகிறது என்று டாக்டர் அம்பேத்கார் அவர்கள் பெரியாரிடம் முன்பு சொன்னது முழுதும் உண்மை என்பது உறுதியாகிறது. டாக்டர் அம்பேத்கார் இதை "ஒரு முட்டாள் தனமான வட்டுக்கதை" என்பதாகச் சொன்னவுடன் தென்னாட்டு ஹைகோர்ட் ஜட்ஜுகள், I. C. S. கள், திவான்கள் ஆதரித்தார்கள். ஆனால் லான்பூரில் 6000 பேர் உள்ள கூட்டத்தில் இதை ஒழிக (மிதேக்கு பால்) என்று கூப்பாடுபோட்டார்கள் என்பதைக் கண்டால் இவர்கள் என்ன செய்வார்கள்? ஓடி ஒளிவதைத் தவிர அங்கு வேறு ஒன்றுமே செய்ய முடியவே முடியாது.

இந்த லக்ஷணத்தில் நம்மில் சில பிரபுக்கள் ஜஸ்டிஸ் கட்சி மதத்தில், ஜாதியில், சாஸ்திரங்களில் பிரவேசிப்பதால் நாங்கள் வேறு கட்சி ஏற்படுத்தவேண்டியதாயிற்று. அதுவும் நாங்கள்தான் (அதாவது ஜாதிமத சாஸ்திரங்களில் பிரவேசிக்காத நாங்கள்தான்) ஜஸ்டிஸ் கட்சி என்று சொல்லிக்கொண்டு ஆரிய ஜட்ஜிகளுக்கும், I. C. S. களுக்கும், சர்க்கார் சிப்பந்திகளுக்கும் நல்ல பிள்ளைகளாவதற்கு முயற்சிக்கின்ற சர், பகதூர், ராவ் பட்டங்களைப்பற்றி என்ன சொல்லுவது என்பது நமக்கு விளங்கவில்லை. ஆனால் ஒன்று சொல்லி முடிக்கின்றோம். அதாவது "அம்மிக்கல்லுகளும் குழவிக் கல்லுகளும் ஆகாயத்தில் பறக்கும்போது" இவர்களைப் பற்றிச் சொல்லவேண்டுமா? என்பதாகும்.

பெரியார் ஈ. வெ. ரா. சுற்றுப்பிரயாணம்.

பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் இந்த வாரம் கீழ்க்கண்ட விபரப்படி சுற்றுப்பிரயாணம் செய்வார்கள்.

14-1-45 சேலம்
15- அய்யம்பேட்டை
16- தாராசுரம்
17- நீடாமங்கலம்
19- கோயமுத்தூர் முதலிய ஊர்களுக்குச் செல்லுவார்.
21-ந் தேதி மதராஸ்.

தோழர் சண்முகவேலு ராஜன் மறைவு

சர். பி. டி. ராஜன் அவர்களின் தம்பியும், குளம்பேடு ஜமீன்தார் திவான்பகதூர் ஜி. அருணாசல முதலியார் அவர்களின் மருமகனும், மதுரை ஜில்லா போர்டு உபதலைவருமான தோழர் எஸ். சண்முகவேலுராஜன் அவர்கள் சென்ற 7-1-45ஆம் தேதி இயற்கையெய்தினார் என்பதையறிந்து வருந்துகிறோம்.

கோயமுத்தூர் கலெக்டர்

கோவை கலெக்டர் தோழர் ஆர். டி. பால் பெல்லாரிக்கு மாற்றப்பட்டதால், தோழர் சி. எப். வி. வில்லியம்ஸ் ஐ. சி. எஸ். கோயமுத்தூர் கலெக்டராகவும் ஜில்லா மாஜிஸ்திரேட்டாகவும் நியமிக்கப்பட்டு பதவியும் ஏற்றிருக்கிறார்.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

காஞ்சியில் தமிழ்த் திருநாள்

14, 15, 16-1-45-ஆம் தேதிகளில் காஞ்சீபுரம் இராசகோபால திருமண மண்டபத்தில் தமிழ்த் திருநாள் (பொங்கல் விழா) வித்துவான் தோழர் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை தலைமையில் கொண்டாடப்படும்.

14-ஆம் தேதி தோழர்கள் கி. இராமலிங்க முதலியார், வித்துவான் மா. இராசமாணிக்கம் பிள்ளை ஆகியவர்களும், 15-ஆம் தேதி டி. எஸ். கண்ணபிரான் பிள்ளை, க. அன்பழகன் ஆகியவர்களும், 16-ஆம் தேதி வ. கார்த்திகேயதாசன், சி. என். அண்ணாதுரை ஆகியவர்களும் சொற்பொழிவாற்றுவார்கள்.

பொங்கல் வாழ்த்து

தன்மதிப் பெருக்கும் பொங்க,
தமிழ்மொழி வளர்ந்து பொங்க,
இன்பமும் உணர்வும் பொங்க,
எழிலொடு நலமும் பொங்க,
அன்புளத் திராவிடர்கள்
அறிவொடு வாழ்க, வாழ்க!
இன்மைகள் சிதைந்து போகத்
திராவிடம் பிரிந்து வாழ்க!

டாக்டர் அம்பேத்கார் வருகை

வடநாட்டு சுற்றுப் பிரயாணங்களினாலும், மத்திய சட்டசபையின் அலுவல்களினாலும் டாக்டர் பி. ஆர். அம்பேத்காரின் தமிழ்நாட்டு சுற்றுப் பிரயாணம் ஜனவரி மத்தியில் இருக்காதென்றும் மத்திய சட்டசபையின் காரியங்கள் முடிந்த பிறகுதான் இருக்குமென்றும் தெரிகிறது. தமிழ்நாட்டிலுள்ள பல சங்கங்களும், தோழர்களும் மிகுந்த ஆர்வமுடன் வரவேற்க பல ஏற்பாடுகளுடன் எனக்கு எழுதிய கடிதங்களை அன்புடன் வரவேற்று அந்த ஆர்வத்தை விட்டுவிடாமல் பல அங்கத்தினர்களைச் சேர்க்கவும், சங்கங்களை நிறுவவும், கூட்டங்கள், மாநாடுகள் கூட்டவும் வேண்டுகிறேன். எழுதிய கடிதங்களின் ஊர்களை சுற்றுப்பிரயாணப்பட்டியில் சேர்க்கப்பட்டிருக்கிறது. டாக்டர் வருகைக்குள் இவ்வளவு காரியங்களையும் செய்கிறவர்கள் அவர் மகிழ்ச்சியடைவார். வேண்டிய விபரங்களும் சட்டதிட்டப் புத்தகங்களும் வேண்டின் எழுதுக.

எம். எஸ். முத்து, ஏ. ரத்னம்,
பொதுக் காரியதரிசிகள்.

முகவரி: சென்னை ஜில்லா ஷெடியூல்ட்காஸ்ட் பெடரேஷன், கெ. இ. போர்ச்சுகீஸ் சர்ச்தெரு, ஜீ. டி. சென்னை.

ஆசல் புகைப்படங்கள்

பெரியார், அண்ணாதுரை, ஸ்டாலின், செல்லம், நெடுஞ்செழியன், அன்பழகன், ஜனார்த்தனம், அர்ச்சுனன், சர்ச்சில், ரூஸ்வெல்ட், பெர்னாட்ஷா ஆகியோர்களது புகைப்படங்கள் எங்களிடம் கிடைக்கும். ஒன்றின் விலை 0—12—0 வேண்டுவோர் எழுதுக.

திராவிடன் பதிப்பகம்,
133-அரங்குபசார் வேலூர். (N. A.)

மாகாண பார்ப்பனரல்லாதார் வக்கீல் சங்கம்

சென்னை பிராட்வே 5/9 என்னுள்ள (தமிழ் ராஜ்யக் கட்சி காரியாலயத்தில்) இல்லத்தில் 31-12-44-ந் தேதி மாகாண பார்ப்பனரல்லாதார் சங்கத்தின் முதலாவது வருடாந்திர மாநாடு சர். பி. டி. ராஜன் அவர்கள் தலைமையில் நடந்தது. வரவேற்புக் கழகத் தலைவர் தோழர் என். ஜி. ரங்கநாயுடு அவர்கள் பேசுகையில், அரசியலில் வக்கீல்களின் முக்கிய பங்கு என்ன என்பதை விளக்கிவிட்டு, பல வக்கீல்களை நியமனம் செய்ததற்கேற்ப பார்ப்பனரல்லாதார்களையும் வக்கீல் சங்கத்திலிருந்து நீதிபதிகளாக நியமனம் செய்ய வேண்டுமென்று அப்புறத்திலும் பேசினார். தோழர் கே. சி. சுப்ரமணியம் வருடாந்திர அறிக்கையை வாசித்தார். சட்டக் கல்லூரியிலும், வியாய இலாகாவிலும் 97 சதவிகிதம் பார்ப்பனரல்லாதாருக்கு ஒதுக்க வேண்டுமென்றும், அடுத்த தேர்தலில் பார்ப்பனரல்லாதாருக்கு தனித்தேர்தல் ஏற்படுத்த வேண்டுமென்றும் ஆரியனாரைக் கேட்டுக்கொள்வதாகவும் தீர்மானிக்கப்பட்டது. ஆந்திர நாட்டிலிருந்தும் புதுடில்லி வங்காளம், அஸ்ஸாம் ஆகிய இடங்களிலிருந்தும் இம்மாநாட்டைப் பாராட்டி செய்திகள் வந்திருந்தன. தலைவர் தமது முடிவுரையில் பார்ப்பனரல்லாத வக்கீல்கள் எல்லாம் இச்சங்கத்தில் உறுப்பினராகச் சேரவேண்டுமென்றும், மாகாணம் முழுவதிலும் பார்ப்பனரல்லாத வக்கீல் சங்கங்களை நிறுவுமாறும் கேட்டுக்கொண்டார்.

சுயமரியாதைச் சங்க ஆண்டு விழா

நீடாமங்கலம் சுயமரியாதைச் சங்க இலவச வாசகசாலை ஆண்டு விழா பெரியார் அவர்கள் தலைமையில் 17-1-45-ந் தேதி புதன் கிழமை விமரிசையாக நடைபெறும். அதுசமயம் தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், மு. ஜனார்த்தனம், சி. பி. சின்னராசு, கே. கே. நீலமேகம், எஸ். கே. சாமி ஆகியவர்கள் பேசுவார்கள். தோழர் ஞானானந்தமும் பேசுவார். ஒலிபெருக்கி உண்டு.

கரூர் திராவிடர் கழகக் கூட்டம்

13-1-45-ந் தேதி சனியன்று மாலை கரூர் திராவிடர் கழகத்தில் 1945 வருடத்திற்குரிய நிர்வாகக் கமிட்டியாளர்கள் தெரிந்தெடுக்கப்படுவார்கள். அனைவரும் வருக.

* *

கரூர் திராவிடர் கழக செயலாளர் டி. தங்கராசுக்கும், சேலம் டவுன் எஸ். சேஷப்ப பிள்ளை குமாரத்தி டி. சாந்தமணிக்கும் 27-12-44-ல் திருமணம் நடைபெற்றது. கரூர் திராவிடர் கழக சார்பாக தம்பதிகளுக்கு பூமாலை சூட்டப்பட்டது.

சேலம் ஜில்லா ஷெடியூல்டு வகுப்பு பெடரேஷன்

2-வது மாநாடு, ஒத்திவைப்பு

31-12-44-ந் தேதி நாமக்கல்லில் நடைபெறவிருந்த இம்மாநாடு தலைவர்களின் சௌகரியத்தை உத்தேசித்தும் ஒப்பற்ற தலைவர் டாக்டர் அம்பேத்கார் அவர்களின் வருகையை முன்னிட்டும் இம்மாநாட்டை ஒத்திவைக்கப்பட்டிருக்கிறதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மு. முத்துசாமி,
வரவேற்புக்கமிட்டித் தலைவர்.

இருகூர் திராவிட கழக ஆரம்பக் கூட்டம்

மேற்படி கழக ஆரம்பக் கூட்டம் 15-1-45-ந் தேதி திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு மேற்படியூர் மார்க்கெட் மைதானத்தில் கோவை திராவிடர் கழகத் தலைவர் தோழர் ஜே. எஸ். கண்ணப்பர் தலைமையில் நடைபெறும். தோழர் நெடுஞ்செழியன் பி. ஏ., ஆனர்ஸ், இன்னும் பல தோழர்களும் சொற்பொழிவாற்றுவார்கள்.

கோவை ஜில்லா திராவிடர் கழகம், ஈரோடு.

கோவைஜில்லா திராவிடர் கழகத்தின் நிர்வாகக்கமிட்டிக் கூட்டம் 21-1-45ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மேற்படி கழகத்தில் நடைபெறும். இதையே அழைப்பாகக் கொண்டு நிர்வாகக் கழக உறுப்பினர்கள் யாவரும் வரக்கோருகிறோம்.

N. அர்ச்சுனன், தலைவர்.
P. பழனிச்சாமி, S. R சந்தானம்,
செயலாளர்கள்.

திருச்சியில் தமிழ்த் திருநாள்

திருச்சி நகரின் கண் உள்ள தமிழ்க் கழகங்களும் தமிழ்ப் பற்றுடைய பிற கழகங்களும் இந்நகரின் பல இடங்களில் 14-1-45-ந் தேதி முதல் 20-1-45-ந் தேதி வரை மேற்படி திருநாள் நடைபெறும். தோழர் பா. வெங்கடாசலம் பிள்ளை விழாவைத் தொடங்கி வைப்பார்.

கோவையில் சீர்திருத்தத் திருமணம்

கோவை தோழர் எ கிருஷ்ணசாமி செட்டியார் குமாரத்தி தோழர் கே. இந்திராணிக்கும் தோழர் எஸ் முனியப்ப செட்டியார் குமாரர் தோழர் எம் துரைசாமிக்கும், அவர்களின் "ராஜ பிரசிடெண்டு" பங்களாவில் 19-1-45 வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு சீர்திருத்த திருமணம் நடைபெறும். அச்சமயம் திராவிடர் கழகத் தலைவர் பெரியார் ஈ வெ ராமசாமி அவர்களும் மற்ற தோழர்களும் "சீர்திருத்த திருமணத்தின் அவசியம்" என்பது பற்றி சொற்பொழிவு நிகழ்த்துவார்கள்.

திராவிடர் கழகம் துவக்கம்

15-1-45-ந் தேதி அய்யம்பேட்டையில் திராவிடர் மாணவர் கழகம் துவக்கப்படும். அன்று பெரியார் ஈ. வெ. ரா. அவர்களும், மற்றும் பல தோழர்களும் கலந்து கொள்வார்கள்.

பரிசு

அந்தனூர் கோவை திராவிடர் கழக ஸ்தாபகரும் தலைவருமாகிய தோழர் அ. கோபாலகிருஷ்ண ராஜூ டிசம்பர் 23, 24-ல் கரும்பியூரில் நடந்த தமிழ்நாடு ராஜாக்கள் 16-வது வருடாந்திரக் கூட்டத்தில் விதவையின் பிரலாபம் என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினதற்கு கும்பகோணம் ஜி. சுப்பையராஜூவால் ஓர் வெள்ளிக்கப் பரிசாக அளிக்கப்பட்டது.

மருத்துவர்களுக்கு அறிவிப்பு

மன்னைச்சநல்லூர் தோழர் இ மாணிக்கம் வெளியிட்டுள்ள வேண்டுகோளில், அகில இந்திய ரேடியோ நிலையமாகிய சென்னை, திருச்சியிலிருந்து மருத்துவர் குலத்தவர்களுக்கு வசதி செய்து கொடுப்பதாக தமக்கு தபால்கள் வந்திருப்பதாகவும், மேற்படி சமூகத்தில் இசையிற்சிறந்த பாடகர்கள் தமக்கு விலாசங்களை எழுதியனுப்பும்படியும் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

"திராவிட வீரன்"

சாதிச் செருக்கு, மதக்கிறுக்கு, பணக்கொழுப்பு, திராவிடக்கொதிப்பு, விதவையின் துடிப்பு, ஆரிய அழிப்பு, வீரதலை விழிப்பு, வீண் சடங்கொழிப்பு, அதீவிற்கழைப்பு, சர்டோடிகள் எதிர்ப்பு, கற்காதல் களிப்பு, தன்மானச்சிறப்பு, சமதர்ம அமைப்பு, நீதியின் நிலைப்பு, நேர்மையின் தீர்ப்பு ஆகிய அரிய பாகங்களை விளக்கும் திறமைமிக்க சித்திர நுணுக்கமாம் 'திராவிட வீரன்' என்னும் சமூக சீர்திருத்த நாடகம் சென்னை மூலக்கொத்தளம் ஆதிதிராவிட இளைஞர் கழகத்தாரால் கூடிய விரைவில் சென்னையில் நிகழ்த்தப்படும்; எதிர்பாருங்கள் கதை வசனம், பாடல், டைரக்ஷன் ஆகியவைகள், மகாமகோபாத்தியாய கவி, முருகேசபாகவதரால் அமைக்கப்பட்டவை.

மறைவு

பெங்களூர் 'திராவிட நாடு' 'குடி அரசு' முதலிய சமூக இயக்கப் பத்திரிகைகளின் அனுதாபியான தோழர் வி. நாராயணசாமி அவர்களின் தந்தை தோழர் வெங்கடசாமப்ப அவர்கள் சில நாட்களாக உடல் நலமில்லாதிருந்து, தமது 58-வது வயதில் கடந்த 4-1-45 வியாழக்கிழமை இரவு 12 மணிக்கு உயிர் துறந்தார் என்பதையறிய வருந்துவதுடன் அன்னார் குடும்பத்தாருக்கு நமது அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம். அவருக்கு 2 ஆண் குழந்தைகளும் 4 பெண் குழந்தைகளும் உண்டு. புரோகிதமில்லாமலே சடங்குகள் செய்யப்பட்டன.

குளித்தலை தமிழ் மாணவர் கழகம்

மேற்படி கழகத்திற்கு 3-வது ஆண்டு நிர்வாகஸ்தர்கள் தேர்தல் கூட்டம் 26-12-44-ந் தேதி தோழர் எ. பி. ஜெயராம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் இ. கிச்சை தலைவராகவும், எ. சண்முகம் உபதலைவராகவும், கே. தங்கவேலு, எ. குப்புசாமி செயலாளர்களாகவும், மற்றும் 9 பேர் கமிட்டி மெம்பர்களாகவும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். பின்னர் தோழர்கள் பாலசுப்ரமணியம் செட்டியார், நா. வேணுகோபால் ஆகியவர்கள் சங்கமும் நமது கடமையும் என்பது பற்றிப் பேசினார்கள்.

திருச்சி திராவிடர் இளைஞர் கழகம்

30-12-44-ஆந் தேதி மாணவத் தோழர் சேதுநாதன் தலைமையில் நடைபெற்ற மேற்படி கழக அங்கத்தினர்கள் கூட்டத்தில் 1945-ஆம் ஆண்டிற்கு நிர்வாகிகள் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். தோழர்கள் இராஜூ தலைவராகவும், சேதுநாதன் உபதலைவராகவும், கோவிந்தராசன் செயலாளராகவும், துரை அரசு, அ. நாசன் கூட்டுக் காரியதரிசிகளாகவும், இராமலிங்கம் பொருளாளராகவும் 9 பேர் நிர்வாக உறுப்பினர்களாகவும் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

சேலம் மாநாட்டுத் தீர்மானங்களை ஆதரித்தும், தப்புப்பிரசாரம் செய்யும் எதிரிகளைக் கண்டித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டன.

எதிர்பாருங்கள்!

டாக்டர் அம்பேத்கார், தோழர் ராமநாதன் இவர்களுடைய படங்கள் வெளிவருகிறது.

திராவிடன் பதிப்பகம்,
133. லாங்குபசார்,
வேலூர் (வ. ஆ.)

திராவிடக் கழகங்கள்

சிறுகனூர்

22-12-44ம் தேதி நடைபெற்ற தே. இ. க. உ. சங்க நிர்வாகக்கூட்டத்தில் அச் சங்கத்தின் பெயர் திராவிடர் கழகமாக மாற்றப்பட்டு கீழ்க்கண்டவர்களை நிர்வாகிகளாகத் தெரிந்தெடுக்கப்பட்டது. தலைவர்: ரெ. ரெங்கசாமி, உபதலைவர்: மு. துரைசாமி, காரியதரிசி: மு. ரெங்கசாமி, உபகாரியதரிசி: என். முத்துவேங்கடாசலம்; 5-பேர் அங்கத்தினர்கள்.

சிதம்பரம்

சிதம்பரம் டவுன் திராவிடர் கழகம் 5-8-44ம் தேதி அமைக்கப்பட்டது. அதன் நிர்வாகஸ்தர்கள் வருமாறு:

தலைவர்: டி. பத்மநாப நாயுடு; செயலாளர்: எம். கே. சுந்தரம்; மற்றும் 7 செயற் குழுவினர்.

சென்னை புரசை

பிரிக்லின் ரோட்டில் சென்னை புரசை திராவிடர் கழகம் திறக்கப்பட்டது. இதன் நிர்வாகக் கூட்டம் 24-12-44-ஆம் தேதி தோழர் சாது, மு. பழனிசாமி அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது.

புதுப்பேட்டை

17-12-44 ஞாயிறு இரவு 10 மணிக்கு தோழர் எஸ். கோவிந்தசாமி அவர்கள் தலைமையில் நடந்த திராவிட கழக உறுப்பினர்கள் கூட்டத்தில் அண்ணாமலை பல்கலைக் கழக மாணவர்கள் வேண்டுகோளின்படி, தென்னார்க்காடு மாவட்டத் திராவிட மாணவர் மாநாட்டை 3-2-45 சனிக்கிழமையன்று புதுப்பேட்டையில் நடத்துவதென்று முடிவுசெய்யப்பட்டு, தோழர் எஸ். கோவிந்தசாமி தலைவராகவும், எ. ஆர். சி. இராமலிங்கம் செயலாளராகவும் கொண்ட வரவேற்புக் குழு ஒன்றும், வி. என். டி. துரைசாமி அவர்களைத் தலைவராகக்கொண்ட பொருள் திரட்டும் குழு ஒன்றும் ஏற்படுத்தப்பட்டன.

மாநாட்டிற்குப் பெரியார் ஈ. வெ. ராமசாமி, அண்ணாதுரை, கரந்தை பெரியசாமிப் புலவர், இரா. நெடுஞ்செழியன் ஆகியோரையும், மாவட்ட மாணவர்களையும் மற்றும் பல தலைவர்களையும் அழைப்பதென முடிவு செய்யப்பட்டது.

17-12-44 தோழர் கி. இரங்கநாதன் பி. ஏ. எல். டி. அவர்கள் தலைமையில் புதுப்பேட்டை விளையாட்டுத்திடலில் நடந்த திராவிடர் கழகப் பொதுக் கூட்டத்தில் தோழர்கள் சாம்பசிவம், அன்பழகன் பி. ஏ. (ஆனர்ஸ்) ஆகியோர் திராவிடநாட்டுப் பிரிவினை பற்றி அரிய சொற்பொழிவாற்றினார்கள். திராவிடர் நாயகமாக விளங்கிய செ. தெ. நாயகம் அவர்கள் மறைவு குறித்து ஓர் இரங்கல் தீர்மானமும், திராவிடர் கழகத்தையும், அதன் நிகரற்ற தலைவர் பெரியார் அவர்களையும் குறித்துக் குறைகூறும் சில திராவிடப் புல்லுருவிகளின் செய்கையைக் கண்டித்து ஓர் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டன. தோழர் வெ. வைத்திலிங்கம் நன்றி கூறினார்.

K. பேட்டை

குளித்தலை தாலுகா கே. பேட்டை பொது மன்றத்தின் முன்னிலையில் 19-12-44 தோழர் வி. கோபால் தலைமையில் நடந்த கூட்டத்தில் தோழர்கள் டி. ஜி. பிச்சைரெத்தினம் தலைவராகவும், என். நாகநாதன் உபதலைவராகவும், டி. ஜி. வீரமணி காரியதரிசியாகவும், எஸ். நாகராசன் பொக்கிஷதாரராகவும், டி. ஆர். சின்னராசு விளம்பர அதிகாரியாகவும், கே. ராசலிங்கம் வரிவசூலாளராகவும் கொண்ட திராவிடர் கழகம் நிறுவப்பட்டது. இக்கூட்டத்தில் சேலம் மாநாட்டுத் தீர்மானங்கள் ஒத்துக்கொள்ளப்பட்டு, திராவிட வாலிபர் கழகமென்றிருந்ததை திராவிடர் கழகம் என்று பெயர் மாற்றப்பட்டது. அந்தப்படியாக, [illegible] ஐந்து தேற்று மீண்டும் கூடிய கோர்ட்டுமாறு குளித்தலை தாசில்தார் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

கரியாபட்டணம்

திருத்துறைப்பூண்டித் தாலுகா கரியாபட்டணம் என்னும் கிராமத்தில் சில திராவிடத் தோழர்களின் முயற்சியின் மீது திராவிடர் கழகம் ஒன்று நிறுவப்பெற்றது. அக்கழகத்திற்கு தோழர்கள் என். சந்தானம், எஸ். கே. செல்லப்பா, ஆர். வேலாயுதன், சி. முருகேசன், எஸ். கே. எஸ். இலக்குமணன் ஆகியோர் முறையே தலைவர், உபதலைவர், செயலாளர், உபசெயலாளர், நிதிகாப்பாளர்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டனர். மற்றும் 7 பேர் நிர்வாகக் கமிட்டி மெம்பர்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

ஆரணி

15-12-44 வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு ஆரணி டவுன் தென்னிந்திய நல உரிமைச் சங்கக் கூட்டம் தோழர் ராஜேந்திர நாயனார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சேலம் மாநாட்டு தீர்மானங்களைப் பின்பற்றி அச் சங்கத்தை "ஆரணி டவுன் திராவிட கழகம்" என்று மாற்ற தீர்மானிக்கப்பட்டது. நிர்வாகத் தேர்தல் அடுத்த கூட்டத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டது.

குளத்தூர்

23-12-44-ம் தேதி குளத்தூர் திராவிடர் கழகத்தின் பொதுக் கூட்டம் அமெரிக்கன் கல்லூரி மாணவத் தோழர் எம். ரத்தினசபாபதி அவர்கள் தலைமையில் நடந்தது. அதுசமயம் 'சண்டே அப்சர்வர்' ஆசிரியர் பாலசுப்ரமணியம் செட்டியாரின் போக்கு பற்றி ஓர் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முகவூர்

29-12-44-ம் தேதி தோழர் மா. கணபதி அவர்கள் தலைமையில் நடந்த அவ்வூர் திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தில், அக் கழக முதலாவது ஆண்டு விழா வருகிற தை மாதக் கடைசி வாரத்தில் நடத்துவதென்றும், விழாவுக்குத் தலைமை வகிக்கத் திராவிட தளபதி சி. என். அண்ணாதுரை அவர்களை அழைப்பதென்றும் முடிவு செய்து கடிதம் எழுதப்பட்டது.

சென்னை

24-12-44-ஆம் தேதி சென்னை ராசப்பா ரோடு 6-ஆம் எண்ணுள்ள கட்டிடத்தில் நடந்த [illegible] திராவிடர் கூட்டத்தில் திராவிடர் கழகம் ஒன்று நிறுவப்பட்டது. தோழர்கள் கே. சோமசுந்தரம் தலைவராகவும், வண்டிக எஸ். எஸ். ஆனந்தம் பொருளாளராகவும், டி. ஏ. எஸ். சாமி பி.ஏ., பி.எல். காரியதரிசியாகவும் தெரிந்தெடுக்கப்பட்டனர். இந்து மத திருத்த சட்டத்தை ஆதரித்தும், பிராமணர்களுக்குத் தனித் தேர்தல் நடத்த வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

பட்டணம்

ராசிபுரம் தாலுக்கா பட்டணம் கிராமத்தில் 24-12-44-ஆம் தேதி திராவிட கழக ஆரம்பக் கூட்டம் தோழர் பி. எ. சித்தப்பசெட்டியார் தலைமையில் நடந்தது. தோழர் வேலப்பன் பாடினார். தோழர்கள், எ. ராமசாமி, எஸ். ஜெகநாதன், தெய்வசிகாமணி, பி. எம். செட்டியண்ணா கவுண்டர், கே. வி. ராமசாமி முதலியவர்கள் திராவிடர்கள் யார், திராவிடர் கடமை என்பன பற்றி சொற்பொழிவாற்றினார்கள். அக் கழகத்திற்கு தோழர்கள் எஸ். செங்கோடு தலைவராகவும், பி. ரங்கசாமி காரியதரிசியாகவும், எஸ். ரங்கசாமி உபகாரியதரிசியாகவும், ஆர். ஞானமூர்த்தி பொக்கிஷதாரராகவும், ஆறுபேர்கள் டைரக்டர்களாகவும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். அச் சங்கத்திற்கு நமது பட்டணம் கிராமத்தில் குறிப்பிட்ட இடத்தில் சங்கத்திற்காகப் பொது மக்களிடம் நிதி வசூலிக்க அச் நிர்வாகக் கழகத்திற்கு அதிகாரம் அளிப்பதென்றும், "ஜஸ்டிஸ் கட்சி" என்ற பெயரால் போலி கட்சியொன்றை நிறுவி வருபவர்களின் செயலைக் கண்டிப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

ஓமலூர்

ஓமலூர் தாலூக்கா திராவிடர் கழகம் சுயமரியாதைச் சங்கம் ஆகியவைகளின் ஆதரவில் 23-12-44ந் தேதி தோழர் ப. கண்ணன் அவர்கள் தலைமையில் நடந்த கூட்டத்தில் "சீர்திருத்தம்" என்பது பற்றியும் காலஞ்சென்ற தோழர் செ. தெ. நாயகம் அவர்களின் சேவையைக் குறித்தும் தோழர்கள் அ. யாதையன், க. வேங்கடாசலம், வீர-பாலன் ஆகியோர் பேசினர்.

இந்து சட்டதிருத்த மசோதாவின் நோக்கமும் பிரிவுகளும் மக்கள் முன்னேற்றத்திற்கேற்றவகையில் இருப்பதால் யாருடைய எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் மேற்படி மசோதாவைச் சட்டமாக்க வேண்டுமென்று இக்கூட்டம் அரசினரைக் கேட்டுக்கொள்கிறது என்று தீர்மானிக்கப்பட்டது.

கோவில்பட்டி

19-12-44ந் தேதி தோழர் எஸ். பி. துரைசாமி தலைமையில் நடந்த ஜஸ்டிஸ் திராவிடர் கழக நிர்வாகக்கமிட்டி கூட்டத்தில், சேலம் மகாநாட்டுக்குப்பின் ஜஸ்டிஸ் கட்சி தலைவர்கள் என்று சொல்லிக்கொண்டு சில ராவ்பகதூர்களும் சில சர்களும் கட்சியின் லட்சியத்தைச்சிறிதும் பொருட்படுத்தாமல் தான்தோன்றித்தனமாக பத்திரிகைகளில் அறிக்கை விடுவதைக் கண்டித்தும் இதுபோல் ஆங்காங்குள்ள திராவிடர் கழகங்கள் கண்டிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அசனமாப்பேட்டை

17-12-44-ந் தேதி தோழர் என். எஸ். சரவணபெருமாள் முதலியார் தலைமையில் ஜஸ்டிஸ் திராவிட மாணவர் கழக சார்பில் நடந்த பொதுக் கூட்டத்தில் தோழர்கள் பரிதிபுரம் வித்வான் கே. கோவிந்தன், சித்தாத்தூர் எஸ். குப்பன் ஆகியவர்கள் திராவிடர் கழகம் அமைப்பதேன் என்பது பற்றிப் பேசினார்கள். தோழர் மே. அம்பலத்தரசனால் வந்தனோபசாரம் கூறப்பட்டது.

சின்னசேலம்

சின்னசேலம் பரிக்கா பெத்தானூர் கிராமத்தில் 24-12-44ந் தேதி தோழர் வி. ஆராவமுதன் தலைமையில் ஜஸ்டிஸ் திராவிடர் கழகத்தின் 3 வது திராவிடர் (கிளை) கழகத் திறப்பு விழா நடைபெற்றது. தோழர் ஜி. ஆர். சலாமணி திறப்பு விழா சொற்பொழிவு ஆற்றினார். தோழர்கள் இரா. [illegible], [illegible] சிற்றரசு, நாயக்கன் முதலியோர் திராவிடர் பிரிவினையை விளக்கிப் பேசினார்கள்.

மேற்படி கழகத்திற்கு தோழர் [illegible] முதலியார் தலைவராகவும், [illegible] செயலாளராகவும், மாணிக்கம் பொருளாளராகவும் மற்றும் 4 பேர் உறுப்பினர்களாகவும் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

நிருபர் முக்கையா

(2ம் பக்கத் தொடர்ச்சி)

இப் பெரும் சொர்ச்சிகள் செய்து ஜெயிலுக்கும் ஆசிரமங்களுக்கும் காலிகள் போகத்தயாராய் இருக்கிறார்கள். எங்கள் நாட்டார் எங்கள் திராவிட நாடு, வடநாட்டு சம்பந்தத்திலிருந்து பிரிந்து தனியாக இருக்கவிரும்பும் நோக்கியம் காரணம்கூட, இந்துமதத்தால் ஏற்பட்ட இழிவும், ஆரிய ஆதிக்கத்திலிருக்கும் இழிவும்கூட ஒழியவேண்டும் என்பதற்குமாகும்.

தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவர்களாகிய டாக்டர் அம்பேத்கார், ராவ்பகதூர் சிவராஜ் போன்றவர்கள் எல்லாம், தாங்கள் இந்துமதஸ்தர்கள் அல்லவென்றும், தாங்கள் இந்துக்கள் அல்ல என்றும் தங்கள் சமூகத்தார் இந்துமதத்திலிருந்து விலகவேண்டும் என்றும், 15-வருடத்திற்கு முன்பிருந்தே சொல்லி வருகிறார்கள். "இந்துமதத்தை விட்டுவிட்டால் எங்களை என்னமதம் என்று சொல்லிக்கொள்வது" என்று கேட்கலாம், உங்களுக்கு துணிவு இருந்தால் நீங்கள் வேறு எந்த மதத்தின் பேரை சொல்லிக்கொண்டால் சமுதாயத்தில் உங்களை தீண்டாமையும் இழிவும் அணுகாதோ அதைச் சொல்லுங்கள், அப்படி சொல்லிக்கொள்வதில் உங்களுக்கு ஏதாவது ஆட்சேபனை இருக்குமானால் நீங்கள் திராவிடர்கள் என்றும், திராவிட சமயத்தவர்கள் என்றும் சொல்லிக்கொள்ளலாம். அதிலும் கஷ்டமிருந்தால் சமரச சமயத்தார், மனித சமுதாய ஜீவகாருண்ய சமயத்தார் என்று சொல்லிக்கொள்ளலாம், பொருள் இல்லாததும், பித்தலாட்டமானதும் இழிவையும் அந்நிய ஆதிக்கத்தையும், சூலட்டையும் தருவதுமான ஒரு கபடமான கற்பனையான (இந்து) மதத்தின் பேரைச் சொல்லிக்கொள்வது என்பது வெட்கக் கேடான காரியமாகும். மதம் வேண்டுமானால் மதம் வேண்டும் என்பவர்கள், மதத் தத்துவங்களையும், அவசியத்தையும் ஆராய்ச்சி செய்து பார்த்து ஒரு மதத்தைத் தழுவுவது என்பது அறிவுடைமையாகும் அப்படி இல்லாமல் தான் ஒரு மதத்தில் பிறந்துவிட்டேன் என்பதனாலேயே அதைஅப்படி விடுவது என்று சொன்னால் அது வருணாசிரமதர்மத்தை மற்றொரு முறையில் பின்பற்றுவதேயாகும். வருத்தமில்லாமல் வாழ என்று சொல்வது எல்லா மதத்திற்கும் தாய் மதம் என்று சொல்லிக் கொள்வதை ஒக்கும். நீங்கள் திராவிடர்கள் என்பதை உணராவிட்டாலும் நீங்கள் ஆரியர்கள் அல்ல, ஆரிய சம்பிரதாயத்திற்குக் கட்டுப்பட்டவர்கள் அல்ல என்றும், ஆரியர்கள் இந்த நாட்டிற்கு குடியேறி வந்த ஒரு அந்நிய இனத்தவர்கள் என்றும், அவர்களுடைய ஆதிக்கத்திற்கு ஏற்பட்ட [illegible] மத சாஸ்திர புராண [illegible] காரணங்களை சுமந்துகொண்டிருக்கிறதன் பயனாகவே இந்த இழிநிலையில் இருக்கின்றீர்கள் என்றும் தெரிந்தால் எனக்கு அதுவே போதுமானதாகும்.

தோழர்களே!

மூன்றுமணிநேரமாக அதிகநேரம் பேசிவிட்டேன், அநேக காரியங்கள் நடக்க வேண்டியிருப்பதால் மகாநாட்டு காரியம் நடவடிக்கை ஆனபிறகு சில வார்த்தைகள் சொல்லுகிறேன். நான் சொன்ன இவற்றை நீங்கள் நன்கு ஆலோசனை செய்துபார்த்து ஒரு முடிவுக்கு வாருங்கள்" என்று பேசினார்.

தேவை

"குடி அரசு" வாரப் பத்திரிகை விற்பனை செய்ய டிபாசிட்டு கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை. மற்ற விவரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

1. திருப்பூர்
2. உடுமல்பேட்டை
3. விருதுநகர்
4. திருநெல்வேலி
5. கிருஷ்ணகிரி
6. தர்மபுரி

மானேஜர்.

"குடி அரசு" பதிப்பக வெளியீடுகள்

3 அணா புத்தகங்கள்

பெண் ஹுரிமையும் மதமும்
இராமாயண பாத்திரங்கள்
இரண்டு வழிகள் (இங்கர்சால்)
சீர்திருத்த மார்க்கம் (,,)
மேயோகூற்று மெய்யா பொய்யா?
பேய்-பூதம்-பிசாசு
மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன
மதமும் விஞ்ஞான சாஸ்திரமும்
பிரபஞ்சஉற்பத்தி
நான் ஏன் கிறிஸ்தவனல்ல?
நான் சம்சயவாதி ஆனதேன்?
பொதுவுடைமைத் தத்துவங்கள்
தமிழ் வரிவடிவ ஆராய்ச்சி
மறுப்புக்கு மறுப்பு (சாமி வேதாசலம் குறிப்பு)

6 அணா புத்தகங்கள்

மனிதன் என்றால் என்ன?
கர்ப்ப ஆட்சி
மெஞ்ஞானமுறையும், மூடநம்பிக்கையும் 1-ம் பாகம்

கிடைக்குமிடம்:
குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

Edited, Printed, and Published by [illegible] at the [illegible] Press 32, [illegible] Street, Erode.